

நெல்லை கிழக்கு மாவட்டம் பாளை தெற்கு ஒன்றிய செயலாளர்,பாளை ஊராட்சி ஒன்றிய குழு தலைவருமான கே.எஸ்.தங்கப்பாண்டியன் அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக அன்னாரது இல்லத்தில் வைத்து நேற்று இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் அன்னாரை இழந்து வாழும் குடும்பத்தினற்கு ஆறுதல் கூறினார்கள். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம், ஆ.பிரபாகரன், முன்னாள் எம்.எல்.ஏ மாலைராஜா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!

# திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, மே 13 -

நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு! திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் நான்காம் ஆண்டு நிறைவு மற்றும் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழா நடைபெறுகிறது. விழாவில் கலந்து கொண்டு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு சிறப்புரையாற்றுகிறார்.

15.05.2024 வியாழக்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு, திருவண்ணாமலை, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் சிலை அருகில். நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு! திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் நான்காம் ஆண்டு நிறைவு மற்றும் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழா நடைபெறுகிறது.

விழாவிற்கு கழக தணிக்கைகுழு உறுப்பினரும், சட்டப்பேரவை துணைத் தலைவர்வருமான கு.பிச்சாண்டி தலைமை வகிக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் செங்கம் மு.பெ.கிரி, கலசப்பாக்கம் பெ.சு.தி.சரவணன், வந்தவாசி எஸ்.அம்பேத்குமார், செய்யாறு ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி. அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

திராவிட மாடல் அரசின் ஐந்தாமாண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு கழக உயர்நிலை



செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு சிறப்புயாற்றுகிறார்.

விழாவில் கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, கே.வி.ராஜ்குமார், ஆர்.வேல்முருகன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜய லட்சுமிரமேஷ், ஜெயராணிரவி, மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தர ராசன், கழக செய்தித்தொடர்பு இணை செயலாளர் சிவ.ஜெயராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலிமணியன்

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம், வடக்கு மாவட்டம் எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், இ.எஸ்.டி.கார்த்திகேயன், ஏ.என்.சம்பத், என்.கே.ஏ.பாபு, அ.மணிகண்டன், மா.ஏழுமலை, தொ.ப.சீ.மதிவாணன், பி.செல்வராஜன், சாது.ஆனந்த், க.சீனுவாசன், ஜி.பி.அசோக், டாக்டர் மகேந்திரன், இ.மணி கண்டன், மாலினிவினோத் திவாகரன், ஐ.எஸ்.அமானுல்லா, ஆர்.ராம்ரவி, ப.க.மணிவண்ணன், அமர் (எ) இப்ராஹிம் ஷெரீப், அப்சல்பாஷா, கே.ஏ.புஷ்பராஜ், பி.எஸ்.சாந்தகுமார், இராணிவெங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், துரை.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், எஸ்.ரவிக்குமார், டி.ராதா, ப.இளங்கோவன், ஏ.சுந்தரேசன், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர்.பெருமாள், தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம். காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே.கோவர்தனன், வேணிஏழுமலை மற்றும் மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன், நகராட்சி தலைவர்கள் எச்.ஜலால் மற்றும் திருவண்ணாமலை மாநகர பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.எஸ்.சண்முகம், பா.ஷெரீப் உட்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறுகிறார். முன்னதாக மாவட்ட திமுக கலைக்குழு அம்பேத்கரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

### தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற நிறுவனர்

# பாவலர் மீனாட்சிசுந்தரம் 5ஆம் ஆண்டு நினைவு நாள்!

## மன்ற பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் வேண்டுகோள்!

சென்னை, மே 13 -

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் நா.சண்முகநாதன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் நிறுவனர், ஆசிரியர் இனக் காவலர் பாவலர் மீனாட்சி சுந்தரம் அவர்களின் நினைவு நாளான 14.5.25 அன்று ஆசிரியர் மன்ற மாநில,மாவட்ட, ஒன்றிய பொறுப்பாளர்கள், என் உயிரினும் மேலானஆசிரியர் மன்ற உறவுகள் அனைவரும் மாவட்ட, மாநகர, நகர,ஒன்றிய,சரக மற்றும் வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் நினைவுநாள் நிகழ்வுகளை நடத்தி புகழ் வணக்கம் செலுத்திடுமாறும் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

பாவலர் அவர்கள் ஆசிரியர் நலன், மாணவர் நலன், சமுதாய நலனுக்காக அவர் ஆற்றிய பணிகள் தொண்டுகள், செய்த உதவிகள், அவர் ஆற்றிய உரைகள், எழுத்துக்கள், திருவாரூர் மருத்துவக் கல்லூரிக்கு



அளித்திட்ட உடல்கொடை போன்றவைகளின் வழியில் ஐயா அவர்கள் உருவாக்கிய இயக்கம் அவர் காட்டிய பாதையில் தடம் மாறாமல் பயணிக்கிறது.

நம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பாவலர் அவர்கள் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த ஆசிரியர் அரசு ஊழியர்களின் வாழ்விலும் நிலைத்து நிற்கிறார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் வாழ்விலும் தாழ்விலும் ஒரே கொள்கைக்கு சொந்தக்காரர் தம்பி மீனாட்சி சுந்தரம் என்று பாராட்டப்பட்டவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப்படை என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட அமைப்பாகும்.அவருடைய நினைவு நாளில் பாவலரின் புகழினை போற்றுவோம் புகழஞ்சலி செலுத்துவோம்.

ஆசிரியர் மன்றத்தின் பச்சை வண்ணக் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்க செய்திடுங்கள்!

பாவலர் ஐயா அவர்களின் திருஉருவப் படம் திறப்புச் செய்து மலர் வணக்கம்- புகழ் வணக்கம் செலுத்துங்கள்! பாவலர் ஐயா அவர்களின் புகழ் பாடுங்கள்! பரப்புங்கள்! போற்றுங்கள்!

இவ்வாறு அவர், தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பாளையங்கோட்டை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# கே.எஸ்.தங்கபாண்டியன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 13 -

திருநெல்வேலி மாவட்டம் , மறைந்த முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.கே.கோட்டையப்பன் சகோதரரும், ஒருங்கிணைந்த பாளையங்கோட்டை ஒன்றிய கழக செயலாளராக 6 முறை கழகப் பணி ஆற்றியும், நான்கு முறை சிவந்திபட்டி ஊராட்சி மன்ற தலைவராகவும் ,

தற்போது பாளையங்கோட்டை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளரும், பாளையங்கோட்டை ஒன்றியக் குழு பெருந்தலைவருமான கே.எஸ்.தங்க பாண்டியன் அவர்கள் நேற்று 12.5.2025 அதிகாலையில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு கே.எஸ்.டி.சுபாஷ் சந்திரபோஸ் என்ற மகனும், 4 மகள்களும் உள்ளனர்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

# உதகையில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

உதகை, மே 13 –

நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே. எம். ராஜு அவர்கள் மற்றும் தமிழ்நாடு தலைமை அரசு கொறடா கா. ராமச்சந்திரன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில பொறியா ளர் அணி செயலாளரும், தலைமை கழக பேச்சாளருமான SKP. கருணாநிதி அவர்கள் அரசின் நலத்திட்டங்களை பட்டியலிட்டு சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் கே. போஜன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் தொரை, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில், வடக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் தங்கராஜ், ஒன்றிய பொருளாளர் செல்வன், சோலூர் பேரூராட்சி தலைவர் கௌரி, பிரகாஷ் குமார், ராமச்சந்திரன், விஸ்வநாதன், விவேக், சோலூர் மூர்த்தி, தூனேரி செந்தில், கடநாடு பிரேம்குமார், எப்பநாடு ஊராட்சி மனோகரன், நந்தகுமார், சேட், உயிலட்டி பால்ராஜ், கணேசன், பரசுராமன், ராமகிருஷ்ணன், சிவபசவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாவட்ட பிரதிநிதி பசுராஜ் அவர்கள் நன்றியுரை கூறினார்.




விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் அருப்புக்கோட்டையில் நகர திமுக இளைஞரணியினருக்கான பயிற்சி பாசறை கூட்டம் நடந்தது. விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமை வகித்தார். நகர தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் சிவா வரவேற்றார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தனுஷ்குமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் தங்கம் ரவிக்கண்ணன், பாசறை ஆனந்த், கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாபு தொகுப்புரை வழங்கினார். தி.மு.க. துணை பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்புராஜா, சிவப்பிரகாசம், முன்னாள் எம்.எல்.ஏ. விஜயக்குமார், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, ஒன்றியச் செயலாளர் பாலகணேசன், பொன்ராஜ் இருந்தனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு தொகுதி பழங்காநத்தம் பகுதி கழகம் விராட்டிபத்தில் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பகுதி செயலாளர் எஸ்.வி.சுதன் தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.தனச்செல்வம், மாநில நிர்வாகிகள் ஆர்.கணேசன், சி.வீரகணேசன், வட்டச் செயலாளர்கள் பாக்யராஜ் என்ற ராஜேஷ், வேல்முருகன், சௌந்தரராஜன் ஆகியோர் முன்னிலையில் கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் மதிவெங்கடேஷ், நாகநாதன், அன்பரசன், மகேஸ்வரன் மற்றும் கழகத்தினர், கழக நிர்வாகிகள், திரளான பொதுமக்கள் உள்ளனர்.



முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி நாடு போற்றும் நான்காம் ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு என மக்கள் விரும்பும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கும் பிரச்சாரக்கூட்டம் கோவில்பட்டி மத்திய ஒன்றியம் சார்பில் 09.05.2025 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் பஸ் ஸ்டாப், மந்தித்தோப்பில் நடைபெற்றது. இதில் பீக்கிலிபட்டி வீ.முருகேசன் கோவில்பட்டி மத்திய ஒன்றிய செயலாளர் அவர்கள் தலைமை வகித்தார். ஜி.மணி வே.கிருஷ்ண மூர்த்தி, வே.முருகன் து.ராமச்சந்திரன் அவைத்தலைவர், டி.ராஜ்மோகன் வழக்கறிஞர் அணி, ரா.அய்யனார் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருமதி பி.கீதாஜீவன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் சிறப்புரை வழங்கினார். சி.பா.ராவணன் தலைமைக் கழக பேச்சாளர் உரை ஆற்றினார். கா.கருணாநிதி என்.ராதாகிருஷ்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கி.ராதாகிருஷ்ணன், திருமதி.ஏஞ்சலா ஆகிய பலர் கலந்து கொண்டனர். வே.சின்னத்தாய் நன்றியுரை வழங்கினார்.



சிறப்பு ஒலிம்பிக் சைக்கிள் போட்டியில் மாநில அளவில் முதல் பரிசு பெற்ற சிறப்பு மாணவன் (மாற்றுத் திறனாளி), தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொள்வதற்கு வசதியாக இரண்டு லட்ச ரூபாய் மதிப்பிலான சைக்கிளை தமிழ்நாடு உணவு ஆணைய தலைவர் என்.சுரேஷ் ராஜன் வழங்கினார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஏ.கே. சுப்பையா
## மே 13 (1996)



**பொதுவுடைமை இயக்கத்தில் பணியாற்றி வந்த இவர், 1971ஆம் ஆண்டு, சட்டப்பேரவையில் 'தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் குடியிருப்பு இடங்களை, அவர்களுக்கே சொந்தமாக்கிட வேண்டும்' என முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை வைத்தபோது, உடனடியாக அக்கோரிக்கையை ஏற்று, நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து 'பொதுவுடைமை இயக்கத்தில் போராடி, சாணிப் பாலுக்கும், சாட்டையடிக்கும் ஆளானோம். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு துளி மையினால் தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கினார் எனக்கூறி அந்த இயக்கத்திலிருந்து விலகி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டார்.**

**1978 முதல் 1996 வரை கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**